بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

*(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)*

*அவர்கள் 23.10.2015 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்*

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

(எனது) ஒவ்வொரு சுற்றுப் பயணத்தின் போதும் அல்லாஹ் தனது உதவி மற்றும் வல்லமைகளுக்கான அடையாளங்களைக் காட்டுகின்றான். இது அவனது அருள் மற்றும் கருணையாகும். கடந்த நாட்களில் நான் ஹாலந்து மற்றும் ஜெர்மனியில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தேன். நமது ஜமாஅத்தின் சென்டர் Nunspeet –ல் உள்ளது. அந்தப் பகுதியைச் சேர்ந்த M.P –க்கு 2–3 ஆண்டுகளுக்கு முன்பு ஜமாஅத்தின் அறிமுகம் கிடைத்திருந்தது. மேலும் அவர் ஹாலந்து நாட்டின் ஒரு ஆண்டு மாநாட்டின் போது என்னையும் சந்தித்திருந்தார். அல்லாஹ் அவர் மூலமாக ஹாலந்து நாட்டின் நாடாளுமன்ற வளாகத்தில் ஓர் நிகழ்ச்சியை நடத்துவதற்கான ஏற்பாட்டினை செய்து விட்டான். அந்த நிகழ்ச்சியில் 89 அரசாங்க அதிகாரிகள் கலந்து கொண்டனர். அதில் டச்சு பாராளுமன்ற உறுப்பினர்களைத் தவிர்த்து ஸ்பெயின், அயர்லாந்து, சுவீடன், குரேஷியா, மோன்டினிகிரோ, அல்பேனியா, பிரான்ஸ், சுவிட்ஸர்லாந்து, பெல்ஜியம், ஜெர்மனி, இந்தியா, பிலிப்பைன்ஸ், டென்மார்க், சைப்ரஸ் ஆகிய நாடுகளைச் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள், தூதரக அதிகாரிகள் மற்றும் அரசு அதிகாரிகளும், பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

எவ்வாறிருப்பினும், ஹாலந்து ஜமாஅத் நல்ல முயற்சி செய்திருக்கின்றது. தொடர்புகளை உருவாக்கியுள்ளனர். ஊடகங்களோடு தொடர்பு கொண்டுள்ளனர். இந்த வகையில் மேலும் தொடர்புகளை அதிகரித்துக் கொள்வார்கள் என நான் நம்புகிறேன். மேலும் இதுவரை செய்த பணிகளையே போதுமானது எனக் கருதி அமர்ந்து விடமாட்டார்கள் எனவும் நான் நம்புகிறேன். அங்கு Parliament House –ல் நடைபெற்ற நிகழ்ச்சியில் 18–20 நிமிடங்கள் சொற்பொழிவாற்றினேன். சுருக்கமாக இஸ்லாத்தின் போதனைகள் மற்றும் தற்போதைய உலகம் எதிர்நோக்கியுள்ள பிரச்சனைகளுக்கான தீர்வையும் எடுத்துரைத்தேன்.

எவ்வாறிருப்பினும், இது அல்லாஹ்வின் பணியாகும். எனவே அவன் உள்ளங்களை கைப்பற்றி அதில் தாக்கத்தை ஏற்படுத்தி விடுகின்றான். மனித முயற்சிகள் ஒன்றும் செல்லுபடியாகாது. இந்த நிகழ்ச்சி நடந்ததே அல்லாஹ்வின் சிறப்பான அருளாகும். இந்த நிகழ்ச்சி ஜமாஅத் முயற்சியால் நடந்தது அல்லது இன்ன நபரின் முயற்சியால் நிகழ்ந்து என்று ஹாலந்து ஜமாஅத் கூறினால் அது தவறாகும். அவர்களில் பெரும்பாலார் இந்த நிகழ்ச்சி எப்படி நடந்தது? என்றே எங்களுக்கு புரியவில்லை என்று தான் கூறும் என்று நான் கருதுகிறேன்.

அந்த M.P தனது உரையின்போது கூறினார்: நீர் எப்படி இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை செய்தீர்? என என்னிடம் பல M.P –க்கள் கேட்டனர். எனவே நம்மவர்கள் பார்வையில் மட்டுமல்ல. அந்நியர்களின் பார்வையிலும் ஒரு சிறிய ஜமாஅத்தின் நிகழ்ச்சிளை Parliament House –ல் நடத்துவதற்கு ஏற்பாடு செய்வது சாத்தியமில்லாத காரியமாகவே இருந்தது.

அந்த M.P கூறுகின்றார்: எனது பார்வையில் விருந்தினர்களின் வருகையாக இருக்கட்டும் அல்லது நிகழ்ச்சியில் ஆற்றப்பட்ட சொற்பொழிவாக இருக்கட்டும். மிகவும் வெற்றிகரமாக அமைந்தது. மேலும் நீண்ட கால விளைவுகள் இந்நிகழ்ச்சியின் மூலம் ஏற்படும் என்றும் அவர் கூறுகின்றார். ஏனெனில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் மிகவும் அருமையான வகையில் தனது தூதுச் செய்தியை வழங்கியுள்ளார்கள். ஹாலந்து நாட்டு மக்களுக்கு இஸ்லாத்தின் அமைதி நிறைந்த வடிவத்தை காணச் செய்வது அவர்களின் உரிமையாகும். மேலும் இந்த தூதுச் செய்திக்கான தேவையும் உள்ளது. கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுடனான இந்த நிகழ்ச்சி ஒரு தொடக்கமாகும். இதுபோன்ற பல நிகழ்ச்சிகள் இன்னும் நடத்துவோம் என்றும் இறுதியில் அவர் கூறினார்.

இன்னும் ஏராளமான கண்ணியத்திற்குரிய விருந்தினர்கள் இந்நிகழ்ச்சியைப் பாராட்டியவாறு, இஸ்லாத்தின் அழகிய வடிவத்தை விவரித்ததற்காக நன்றியும் கூறினர். ஹாலந்து நாட்டின் முன்னாள் பாதுகாப்புத்துறை அமைச்சரும் இந்நிகழ்ச்சிக்கு வருகை தந்திருந்தார். இன்னும் சொல்லப்போனால் நிகழ்ச்சிக்குப் பிறகு நீண்ட நேரம் என்னுடன் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார். அவர் தனது கருத்தை வெளிப்படுத்தும்போது உங்களின் தூதுச் செய்தியின் மூலம் இஸ்லாத்தின் உண்மையான முகத்தைக் காணும் வாய்ப்பு கிடைத்தது. நீங்கள் மீண்டும் மீண்டும் ஹாலந்திற்கு வருகை தர வேண்டும். அதன் மூலம் மக்களின் உள்ளங்களிலிருந்து இஸ்லாத்தைப் பற்றிய அச்சம் அகன்றுபோக வேண்டும் எனவும் நான் ஆசைப்படுகிறேன் என்று அவர் கூறினார். பாராளுமன்ற குழுவின் கேள்விகளுக்கு தாங்கள் அளித்த பதில்கள் அறிவு படைத்த மக்களின் கண்களை திறப்பதற்குப் போதுமானதாகும் என்றும் அவர் கூறினார்.

அடுத்து அந்நிகழ்ச்சியில் ஸ்பெயின் நாட்டு தூதரும் வருகை தந்திருந்தார். அவர் கூறுகின்றார்: குறிப்பாக கருத்து சுதந்திரம் மற்றும் பிறரின் மார்க்கத்தை மதித்து நடத்தல் போன்ற உணர்வுப்பூர்வமான கேள்விகளுக்கு இமாம் ஜமாஅத் அவர்கள் வழங்கிய பதில்கள் மிகவும் பொருத்தமானதாகும். மேலும் தமது சொற்பொழிவில் சகிப்புத்தன்மை, மார்க்க சுதந்திரம் தொடர்பாக இஸ்லாத்தின் போதனைகளின் அடிப்படையில் கூறிய விஷயங்கள் உள்ளத்தை வசமாக்கி விட்டது. நான் அக்கருத்துக்களை மிகவும் ஆதரிக்கின்றேன். ஏனென்றால் மத நல்லிணக்கம் மற்றும் உலக அமைதியை நிலைநாட்ட இவ்விஷயங்கள் மிகவும் அவசியமாகும்.

ஸ்பெயின் நாட்டு M.P கூறுகின்றார்: மனித இனத்திற்கான அமைதி, சுதந்திரம் மற்றும் அனைத்து உலகையும் படைத்த இறைவனின் மீதான அன்பு போன்ற கவரும் வகையிலான தூதுச் செய்தியை செவிமடுத்து உள்ளம் மிகவும் மகிழ்வுற்றது. போர் மற்றும் மார்க்கத்தின் பெயரால் அனுதினமும் அநீதிகள் அதிகரித்து வரும் இன்றைய உலகில் இதுபோன்ற அமைதி நிறைந்த

தூதுச் செய்தியை செவிமடுத்து நன்றி கூற வேண்டும். அமைதியை விரும்புகின்ற மார்க்கத்தின் வழி நடக்கின்ற மக்கள் அனைவரும் இந்த தூதுச் செய்தியின் கீழ் ஒன்றிணைய வேண்டும். நமக்கிடையே நிலவும் கருத்து வேறுபாடுகளில் முன்னேறுவதற்கு பதிலாக நம்மிடையே நிலவும் ஒருமித்த கருத்துக்களில் நாம் ஒன்றிணைய வேண்டும்.

அடுத்து, Montenegro –விலிருந்து 3 நபர்கள் வந்திருந்தனர். அவர்களில் ஒருவர் அந்நாட்டின் M.P ஆவார். அவர் கூறுகின்றார்: இந்நிகழ்ச்சி ஜமாஅத்திற்கு மிகப்பெரிய வெற்றியாகும். ஜமாஅத்தின் இமாம் அவர்கள் இஸ்லாத்தின் உண்மையான போதனைகளை மிகவும் உயர் தரமான முறையில் எடுத்துரைத்தார்கள். ஹாலந்து நாட்டின் M.P –க்களின் கேள்விகள் மிகவும் புண்படுத்தும் வகையில் அமைந்திருந்தன. ஆனால் ஜமாஅத்தின் இமாம் அவர்கள் மிக ஆதாரப்பூர்வமாக, உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு பதிலளித்தார்கள். இதிலிருந்து ஜமாஅத்தின் இமாம் அவர்கள் மிக தைரியத்துடனும் சகிப்புத் தன்மையுடனும் பேசும் ஆற்றல் படைத்தவர் என்பதும் தெளிவாகின்றது. இன்றைய ஆபத்து நிறைந்த உலகில் இதுபோன்ற நிகழ்ச்சிகள் மிகவும் அவசியமாகும்.

அடுத்து, மனித உரிமை பாதுகாப்பு சபையின் இரண்டு பெண் உறுப்பினர்கள் வந்திருந்தனர். அவர்கள் கூறுகின்றனர்: பாராளுமன்ற வளாகத்தில் வழங்கப்பட்ட இந்த தூதுச் செய்தியை வெளியுறவுக் கொள்கைகளை உருவாக்குகின்ற நபர்கள் வரை கொண்டு சேர்க்க வேண்டும்.

அடுத்து, குரேஷியாவிலிருந்து ஒரு M.P வந்திருந்தார். அவர் கூறுகின்றார்: ஜமாஅத்தின் இமாம் அவர்கள் இஸ்லாத்தின் போதனைகளை மிகவும் தெளிவாகவும், அழகாகவும் எடுத்துரைத்தார்கள். உலகில் அமைதியை நிலைநாட்டுவதில் இஸ்லாமிய போதனைகள் மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவையாகும். அனைத்து முஸ்லிம்களும் இந்த போதனைகளை முழு மனதோடு செயல்படுத்தினால் இந்த உலகம் அமைதிப்பூங்காவாக மாறி விடும். கருத்து சுதந்திரம் பற்றி அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தலைவர் அவர்கள் எடுத்துரைத்த ஆணித்தரமான உதாரணங்கள் மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாகும். பாகிஸ்தானில் அஹ்மதிகள் மீது அநீதியிழைக்கப்படுகின்றது என்றபோதிலும், அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தலைவர் அவர்கள் பாகிஸ்தானை நேரடியாக விமர்சனம் செய்வதிலிருந்து தவிர்ந்து கொண்டார். மேலும் இஸ்லாத்தின் உண்மையான போதனையின்படி செயல்படுமாறு அனைத்து முஸ்லிம்களுக்கும் அழகிய வடிவில் அறிவுரை வழங்கினார்கள். அன்னாரின் இந்த அணுகுமுறை தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாகும்.

மேலும் கூறுகின்றார்: ஆயுதம் பரவல் தடைச் சட்டம் நிதி ஆதாரம் கிடைப்பதை தடை செய்வது தொடர்பாக அன்னார் வெளிப்படுத்திய கருத்துகள் உண்மையை வெளிப்படுத்தக் கூடியதாகும். உண்மையிலேயே உலகின் வல்லரசுகள் இக்கருத்துகளுக்கேற்ப உண்மையோடும், அக்கறையோடும் செயல்பட்டால் உலகம் அமைதியின் பக்கம் திரும்பி விடக்கூடும்.

சுவீடனிலிருந்து வந்திருந்த M.P கூறுகின்றார்: சொற்பொழிவு மிக நன்றாக இருந்தது. தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியது. மார்க்கத் தலைவர் என்ற வகையில் தாங்கள் உலகின் அரசியல் தலைவர்களை உலுக்கி விட்டீர்கள். சொற்பொழிவில் உண்மை இருந்தது. அமைதி, நீதி, மனிதநேயம், அன்பு மற்றும் சகோதரத்துவம் தொடர்பாக மிக எளிதாகப் புரியும் வகையில் ஜமாஅத்தின் இமாம் கவனமூட்டியுள்ளார்கள். உலகிற்கு தூதுச் செய்தியை வழங்கியுள்ளார்கள். வெளியுறவுத்துறைக் கமிட்டி சார்பாக கருத்து சுதந்திரம் பற்றி கேட்கப்பட்ட கேள்விகளுக்கு கொடுக்கப்பட்ட பதில்கள் மிகவும் ஆணித்தரமானதாகும். அவர்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தலைவரின் கருத்தை புரிந்து கொள்ளவில்லை. எங்கள் நாட்டில் நாஜிகளின் பேட்ஜ் அணிவது கூட சட்டரீதியாக குற்றமாகும். அவ்வாறு அணிந்தால் அதற்கு தண்டனையும், அபராதமும் விதிக்கப்படும்.

ஆம்ஸ்டர்டேம் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் – இவர் புத்த மதம், இஸ்லாம் மற்றும் பிற மார்க்கங்களில் புலமை பெற்றவர் ஆவார். அவர் தனது கருத்தை இவ்வாறு கூறுகிறார்: ஜமாஅத்தின் இமாம் அவர்கள் அமைதி தொடர்பான இஸ்லாமிய போதனைகளை எந்த அளவுக்கு தெளிவாக எடுத்துரைத்தார்கள் என்றால், அதிலிருந்து ஒரு விஷயம் எனக்கு புரிந்து விட்டது. அதாவது நம்முடைய Inter-faith Dialogue நிகழ்ச்சிகளில் ஜமாஅத்தின் பிரதிநிதித்துவம் தவிர்க்க முடியாததாகும். இனி ஜமாஅத் எங்களது நிகழ்ச்சிகளில் தவறான பங்கு பெற வேண்டும். ஏனென்றால், அப்போதுதான் இஸ்லாத்தின் உண்மையான வடிவம் எங்களுக்கு தெரிய வரும்.

இதுமட்டுமல்லாமல், ஹாலந்தில் நான் தங்கியிருந்த நான்கைந்து நாட்களில் ரேடியோ அல்லது டி.வி சேனல்களின் நிருபர்கள் தினமும் வருகை தந்து என்னிடம் பல பேட்டிகளை எடுத்தார்கள். 30 நிமிடங்களிலிருந்து 35–40 நிமிடங்கள் வரை உரையாடல் மற்றும் நேர்காணல் நடந்தது. அதில் அவர்களுக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அந்தஸ்து, அன்னாரின் வாதம் மற்றும் இஸ்லாமிய போதனைகளை உலக அமைதி, கிலாஃபத் போன்ற பல்வேறு தலைப்புகளில் விஷயங்கள் கூறப்பட்டன. அதன் முழு விவரங்களை நீங்கள் படித்துக் கொள்ளலாம். அல்லது ஏதாவது ஒரு வகையில் பார்த்தும் கொள்ளலாம். எவ்வாறிருப்பினும், அங்கு மிகப்பெரிய அளவில் ஜமாஅத்தின் அறிமுகம் ஏற்பட்டுள்ளது. மேலும் பேராசிரியர் அவர்கள் கூறியது போன்று, இஸ்லாம் தொடர்பான உண்மையான போதனைகளை அறிய வேண்டும் என்றால் அஹ்மதிகளை நமது நிகழ்ச்சிகளில் தவறாது இணைத்துக் கொள்ள வேண்டும் என்பதை கல்வி அறிவு படைத்த பிரிவினர் ஒப்புக் கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது.

நான் கூறியது போன்று நேர்காணல் அக்டோபர் 5 –ம் தேதி நடந்தது. அதனை Nunspeet –ன் RTV பைத்துந் நூர் மஸ்ஜிதிலிருந்து நேரலை ஆக ஒளிபரப்பியது. அக்டோபர் 5 –ம் தேதி ஹாலந்து நாட்டின் ஒரு மண்டல டி.வி நிறுவனத்தைச் சார்ந்த நிருபர் ஒருவர் என்னிடம் நேர்காணல் நடத்தினார். அக்டோபர் 6 –ம் தேதி ஹாலந்து நாட்டின் தேசிய செய்தித்தாளின் நிருபர் என்னிடம் பேட்டி கண்டார். அந்த செய்தித்தாளின் பிரதிகள் 50,000 என்பது குறைவு தான். அக்டோபர் 7 –ம் தேதி

மீண்டும் ஒரு மண்டல பத்திரிகையின் நிரூபர் வந்தார். என்னிடம் பேட்டி எடுத்தார். அந்த பத்திரிகையின் வெளியீட்டுப் பிரதிகள் சுமார் ஒரு இலட்சம் ஆகும். அக்டோபர் 9 –ம் தேதி ஹாலந்து நாட்டின் மற்றொரு பத்திரிகை நிரூபர் என்னிடம் நேர்காணல் செய்தார். அதுவும் பெருமளவில் படிக்கக்கூடிய பத்திரிகையாகும். அது ஒரு மார்க்கப் பத்திரிகையும் ஆகும். இந்த நேர்காணல்கள் மற்றும் ஊடகங்கள் வாயிலாக அல்லாஹ்வின் அருளால் மிகப்பெரிய அளவில் நமக்கு கவரேஜ் கிடைத்துள்ளது. நான் கூறியது போன்று, முதன்முறையாக ஹாலந்து ஜமாஅத் இவ்வளவு பெரிய அளவில் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளது. அந்த வகையில் மிக நல்ல முறையில் அவர்களின் நிகழ்ச்சி அமைந்தது. ஒட்டுமொத்தமாக பார்த்தால் பிரஸ் ஊடகங்கள் வாயிலாக முதல் முயற்சியிலேயே 8 மில்லியன் மக்கள் வரை ஜமாஅத் செய்தி சென்றடைந்துள்ளது.

ஹாலந்து நாட்டில் ஜமாஅத்தின் இரண்டாவது மஸ்ஜிதுக்கான அடிக்கல் நாட்டுவதற்கான பாக்கியமும் கிடைத்தது. அல்லாஹ் விரைவாக அதன் கட்டுமானப் பணிகளை முழுமை அடையச் செய்வானாக! 60 ஆண்டுகளுக்குப் பிறகு ஜமாஅத் அங்கு முறையாக பள்ளிவாசல் கட்டுகின்றது. அங்கு ஜமாஅத்தின் 2 சென்டர்கள் உள்ளது. ஆனால் முறையாக பள்ளிவாசல் இல்லை. தற்போது பள்ளிவாசல் என்பது காலத்தின் மிக கட்டாயத் தேவையாக உள்ளது. பள்ளிவாசல் அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து கொண்ட ஒட்டுமொத்த விருந்தினர்களின் எண்ணிக்கை 102 ஆகும். எந்த நகரத்தில் மஸ்ஜித் கட்டப்படுகின்றதோ அந்த நகரத்தின் மேயர் மற்றும் நீதிபதிகள், வக்கீல்கள், மருத்துவர்கள், Architectures, மார்க்கத் தலைவர்கள்மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த அறிஞர்கள் அந்நிகழ்ச்சியில் விருந்தினர்களாக கலந்து கொண்டனர். மேலும் அல்பானியா, சுவிட்ஸர்லாந்து, ஸ்பெயின், குரேஷியா போன்ற நாடுகளிலிருந்து ஒருநாள் முன்பாக விருந்தினர்கள் வந்திருந்தனர். அவர்களும் கலந்து கொண்டனர்.

மேயர் சாஹிப் அவர்கள் சொற்பொழிவில் கூறினார்: மஸ்ஜித் தொடர்பாக தாங்கள் கூறிய கருத்துகள் உள்ளத்தில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. தாங்கள் வழங்கியுள்ள தூதுச் செய்தி அமைதி நிறைந்த சமூகத்தை உருவாக்கப் போதுமான தூதுச் செய்தியாகும். நாம் அனைவரும் இணைந்து அதனை செயலளவில் அமல்படுத்த முயற்சி செய்ய வேண்டும். இந்த மஸ்ஜித் மூலமாக அமைதியின் தூதுச் செய்தி உலகில் கண்டிப்பாக பரவும் என நான் நம்புகிறேன் என்றும் அவர் கூறினார்.

அடுத்து, ஒரு கவுன்சிலர் கூறுகின்றார்: இந்த தூதுச் செய்தி அனைத்து அறிஞர் பெருமக்களுக்கும் ஒரு கலங்கரை விளக்காகும்.

லிபரல் அரசியல் கட்சி தலைவர் கூறுகின்றார்: எதிர்காலத்தில் உங்களது ஜமாஅத்து தான் உலகின் அமைதிக்கு சான்றாக அமையும் என எனக்கு தோன்றுகிறது.

அங்கு தேசிய முஸ்லிம் வானொலி ஒன்றும் நடத்தப்படுகின்றது. மஸ்ஜித் அடிக்கல் நாட்டு விழா அன்று அந்த வானொலி மஸ்ஜித் அடிக்கல் நாட்டு விழா பற்றி நான்கரை நிமிட அறிக்கையை ஒலிபரப்பு செய்தது. அதில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகை பற்றி கூறப்பட்டது. மேலும் நான் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் கலீஃபா எனவும், பள்ளிவாசல் அடிக்கல் நாட்டு விழாவிற்கு நான் வந்திருப்பதாகவும் என்னைப் பற்றி கூறப்பட்டது. மேலும் பள்ளிவாசல் அடிக்கல் நாட்டு விழாவில் நான் நிகழ்த்திய சொற்பொழிவின் சில பகுதிகளும் ஒலிபரப்பப்பட்டது.

அதன் பிறகு ஜெர்மனியில் இரண்டு மஸ்ஜித்களுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது. அங்கேயும் அறிஞர்கள் பலர் வந்திருந்தனர். அங்கும் நல்ல முறையில் நிகழ்ச்சிகள் நடந்தேறின. ஜமாஅத்தைப் பற்றிய அறிமுகம் ஏற்கனவே உள்ளது. மேலும் அதிகமாகியுள்ளது. Node Hall –ல் ஹாலந்திலிருந்து ஜெர்மனி செல்லும் வழியில் பள்ளிவாசலுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது. அங்கு ஒரு டி.வி சேனல் என்னிடம் நேர்காணல் எடுத்தது. செய்தியும் ஒளிபரப்பியது. முன்னாள் மேயர் ஒருவரும் அங்கு வந்திரந்தார்.

அவர் கூறினார்: இந்த வாரம் ஞாயிற்றுக்கிழமை உங்களுக்கு சர்ச்சிற்கு செல்ல வேண்டிய அவசியமில்லை. நமக்கு என்ன விஷயங்கள் அவசியமோ அதனை இவர்களின் கலீஃபா கூறி விட்டார் என நான் என்னுடன் வந்தவர்களிடம் கூறி விட்டேன்.

இப்படியும் கூட சிலர் தமது கருத்துக்களை வெளிப்படுத்துகின்றனர். அல்லாஹ் உண்மையாகவே இவர்களின் உள்ளங்களை திறக்கட்டும். இவர்கள் உண்மையிலேயே இஸ்லாத்தின் அழகிய போதனையைப் புரிந்து இஸ்லாத்தை ஒப்புக் கொள்ளும் நற்பாக்கியத்தை பெற்றுக் கொள்ளட்டும்!

ஒரு ஜெர்மனி பெண்மணி கூறுகின்றார்: உண்மையிலேயே இது மிகவும் நல்லதொரு நிகழ்ச்சியாகும். எனக்கு இஸ்லாத்தைப் பற்றி அதிகமாக எதுவும் தெரியாது. இன்று கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் கூறியதன் மூலமாகவே எனக்கு சரியான ஞானம் கிடைத்துள்ளது.

அடுத்து, ஒரு ஜெர்மனி கூறுகின்றார்: நான் ஒரு கத்தோலிக்க மதத்தைச் சார்ந்தவன் ஆவேன். இன்று நான் ஓர் அழகிய மார்க்கமான இஸ்லாத்தைக் கற்றுக் கொண்டேன். இந்நிகழ்ச்சியின் வாயிலாக இஸ்லாத்தைப் பற்றி அதிகம் ஆராயும் ஆசை எனக்கு ஏற்பட்டுள்ளது. கலீஃபா அவர்கள் உண்மை இஸ்லாத்தை எங்களுக்கு கற்றுத் தந்துள்ளார்கள். அன்பு, சுதந்திரம் மற்றும் அமைதி எனும் அடித்தளத்தில் தான் இஸ்லாம் நிலைநிற்கின்றது என்று நான் அறிந்து கொண்டேன். இஸ்லாம் அண்டை அயலாரின் உரிமைகள் மீது அதிக அழுத்தம் தருகின்றது என்ற விஷயம் எனக்கு மிகவும் பிடித்துள்ளது.

அடுத்து, ஒரு ஜெர்மன் பெண்மணி கூறுகின்றார்: நான் மார்க்கவாதியல்ல. எந்த மார்க்கத்தின் மீதும் எனக்கு நம்பிக்கை இல்லை. மாறாக, உலகில் ஒரு கலீஃபா இருக்கின்றார் என்பது கூட எனக்கு தெரியாது. ஆனால் இன்று நான் இந்த கலீஃபாவை கண்ட பிறகு அவரது கூற்றைக் கேட்ட பிறகு இஸ்லாத்தைப் பற்றி நல்ல எண்ணங்களைச் சுமந்து செல்கிறேன். பள்ளிவாசல்

என்பது வெறும் இறை வணக்கத்திற்காக மட்டுமல்ல. மாறாக, மக்களுக்கு தொண்டுகள் ஆற்றுவதற்காகவும் தான் என்பதை இன்று நான் தெரிந்து கொண்டேன். மஸ்ஜித் அண்டை அயலாரின் உரிமைகளைக் காக்கும் இடம் என்றும், மஸ்ஜித் அமைதியை பரப்புமிடம் என்றும் நான் அறிந்து கொண்டேன். இஸ்லாத்தைப் பற்றி ஒரு மனிதனுக்கு என்ன சந்தேகங்கள், அச்சங்கள் இருக்குமோ அவை அனைத்தும் ஜமாஅத்தின் இமாம் சொற்பொழிவின் மூலம் அகன்று விடும்.

அடுத்து ஒரு பெண் பத்திரிகையாளர் கூறுகிறார்: நான் இமாம் ஜமாஅத்தினை பேட்டி எடுக்க எண்ணியிருந்தேன். ஆனால், கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் சொற்பொழிவைக் கேட்ட பிறகு எந்தவொரு நேர்காணல் செய்வதற்கும் அவசியம் ஏற்படவில்லை. ஏனென்றால் இஸ்லாம் தொடர்பாக ஒரு மனித மூளையில் என்னென்ன சந்தேகங்கள் மற்றும் ஐயப்பாடுகள எழுத முடியுமோ அவை அனைத்திற்கும் கலீஃபத்துல் மஸீஹ் தனது சொற்பொழிவில் பதிலளித்து விட்டார்கள்.

அதே போன்று ஒரு கணவன், மனைவி அங்கு அமர்ந்திருந்தனர். ஓர் அஹ்மதியிடம் பர்தாவைப் பற்றி விவாதிக்கத் தொடங்கினர். இங்கு ஆண்கள் மட்டுமே தென்படுகின்றனர். பெண்கள் ஏன் வரவில்லை? எனக் கேட்டனர். பர்தாவின் முக்கியத்துவம் எனது உரையில் கூறப்பட்டிருந்தது. அதன் பின்னர் கூறினர். மேற்கத்திய நாடுகளில் பெண் சுதந்திரம் என்பது போலியானது. அது சரியானதல்ல. நீங்கள் பர்தாவின் முக்கியத்துவத்தைப் புரிய வைத்து விட்டீர்கள். அதில் தான் பெண்ணின் கண்ணியம் உள்ளது எனக் கூறினர். அந்நியர்களுக்கும் கூட இஸ்லாமிய போதனைகள் புரிய வருகின்றன. எனவே நமது பெண்களுக்கு சில சந்தர்ப்பத்தில் தாழ்வு மனப்பான்மை ஏற்படுகின்றது. அவ்வாறு ஏற்படக் கூடாது. மாறாக, நம்பிக்கை அதிகரிக்க வேண்டும்.

இந்த ஆண்டு ஜாமிஆ அஹ்மதிய்யா ஜெர்மனியின் முதல் வகுப்பு ஏழாண்டு படிப்பை முழுமை செய்து தேர்ச்சி பெற்று விட்டது. 16 முபல்லிக்குகள் முரப்பியான்கள் தயாராகி உள்ளனர். அவர்களின் பட்டமளிப்பு விழாவும் இருந்தது. நான் ஜெர்மனி சென்றதன் அசல் நோக்கமே இதுவாகத்தான் இருந்தது. 2008 –ல் அங்கு ஜாமிஆ மிகச்சிறிய கட்டடத்தில் குறைவான அறைகளில் ஆரம்பமானது. தற்போது அங்கு முறையாக ஜாமிஆவிற்கென்று தனிக் கட்டடம் உள்ளது.

ஜுமுஆ தொழுகைக்குப் ஹுஸூர் அவர்கள் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் மகனான ஹஸ்ரத் மிர்ஸா அஸ்ஹர் அஹ்மது சாஹிப் அவர்களுடைய ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைத்தார்கள். அன்னார் அக்டோபர் 14 –ம் தேதி 2015 ஆம் ஆண்டு மரணமடைந்தார்கள். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன். அன்னார் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் மகன்களில் கடைசி மகன் ஆவார்.

அவரின் மரணம் நிகழ்ந்துள்ளது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது அவர்களின் இரண்டாம் தலைமுறை முடிந்து விட்டது. மூன்றாம் தலைமுறை, நான்காம் தலைமுறை மற்றும் எதிர்கால சந்ததிகளையும் மார்க்கத்தில் நிலைபெறச் செய்வானாக! 1933 ஆம் ஆண்டு அக்டோபர் 17 –ம் தேதியன்று காதியானில் ஹஸ்ரத் உம்மே நாஸிர் (ரலி) அவர்களின் வயிற்றில் மகனாகப் பிறந்தார்கள். காதியானிலேயே ஆரம்பக்கல்வி பயின்றார்கள். மெட்ரிக் தேர்ச்சி பெற்றார்கள். இந்திய–பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு ஜாமிஆ அஹ்மதிய்யாவில் சேர்ந்தார்கள். ஜாமிஆவில் படித்து முடித்த பிறகு தஹ்ரீகே ஜதீதில் ஓராண்டு இன்சார்ஜ் மிஷனரியாக பணி செய்தார்கள். அதன் பிறகு சதர் அஞ்சுமன் அஹ்மதிய்யா கருவூலத்தின் துணை அதிகாரியாக 1961 ஆம் ஆண்டு அக்டோபர் 21 –ம் தேதி அன்னார் நியமனம் செய்யப்பட்டார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நமது ஜமாஅத் தனது வரலாற்றை நினைவில் வைப்பதில் மிகவும் சோம்பேறியாக உள்ளது. தனது வரலாற்றை நினைவு கூர்வதில் இதுபோன்று வேறொரு சமுதாயம் இருக்க வாய்ப்பில்லை. கிறிஸ்தவர்களைப் பாருங்கள். இந்த அளவுக்கு அவர்கள் தமது வரலாற்றை நினைவு கூர்வதில் சோம்பலை வெளிப்படுத்தவில்லை. முஸ்லிம்களைப் பாருங்கள். அவர்கள் சஹாபா (ரலி) அவர்களின் வரலாற்றினை எந்த அளவுக்கு விளக்கமாக எடுத்துரைத்துள்ளார்கள் என்றால் சில புத்தகங்கள் பல்லாயிரம் புத்தகங்களைக் கொண்டதாக உள்ளது. ஆனால் அறிவார்ந்த காலகட்டத்தில் நமது ஜமாஅத் தோன்றியிருந்த போதிலும் தனது வரலாற்றினை நினைவு கூர்வதில் மிகவும் கவனமற்றதாக செயல்படுகிறது. எனவே மக்கள் இதனையும் கருத்தில் கொள்ள வேண்டும். முன்னரும் கவனமூட்டப்பட்டுள்ளது. குடும்ப வரலாற்றை ஞாபகம் வைப்பதில் கவனம் செலுத்துங்கள். சஹாபாக்களைப் பற்றி எழுதப்பட வேண்டும்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இந்த வரலாற்றுச் சிறப்பம்சங்களின் காரணமாகவே இதனை குறிப்பிட்டேன். அன்னாரின் மனைவி சில ஆண்டுகளுக்கு முன்பு மரணித்த போதும் நான் குறிப்பிட்டிருந்தேன்.

அல்லாஹ் அன்னாருடன் மன்னிப்பு மற்றும் கருணையோடு நடந்து கொள்வானாக! தனது அன்பர்களின் வட்டத்தில் அவருக்கு இடமளிப்பானாக!

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
at Baithul Futuh,London – on 23.10.2015
Tamil Translation : Moulavi. Abdur Rahman Tahir Sb
Published By Nazarath Nashr-O-Isha'ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516